# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.506/2022

சாட்சி : PW– 1
பெயர் : திரு. அய்யனார் தேதி : 01.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

நானும், பிரதிவாதிகளும் சேலம் தைலானூரில் வசித்து வருகிறோம். 2ம் பிரதிவாதி எனக்கு நீண்ட கால நண்பர் என்றால் சரியல்ல. அவர் எனக்கு தெரிந்தவராவார். அவர் எனது மைத்துனருடன் சாயப்பட்டறைக்கு வருவார் அந்த வகையில் எனக்கு தெரியும். பூபதி கூலி வேலை செய்து வருகிறாரா என்றால் ஆமாம். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது மகன் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். நான் வேறு யாருக்கேனும்கடன் கொடுத்துள்ளேனா என்றால் தெரிந்த நபர்களுக்கு கொடுத்துள்ளேன். நான் 4, 5 நபர்களுக்கு கடன் கொடுத்ததாக சேலம் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தவில்லை. எனது மகன் எனக்கு பணம் கொடுப்பார் என்றும், அந்த பணம் என்னிடம் இருக்கும் என்றும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு கடந்த 2 ஆண்டுகளாக வங்கி கணக்கு உள்ளது. அதற்கு முன்பாக இல்லை. 2020ம் ஆண்டு கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான். 2020ம் ஆண்டு ஜீலை மாதம் மத்திய அரசின் உத்தரவின்பேரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், யாரும் வெளியில் செல்ல இயலாது என்றும் சொன்னால் சரிதான். பிரதிவாதிகளுக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு 20 தினங்களுக்கு முன்பாக அவர்கள் நிலம் வாங்க போவதாக

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.01 17:22:29 +0530

I Additional District Judge,
Salem

தெரிவித்து என்னிடம் பணம் கேட்டார்கள். அவர்கள் வாங்க இருக்கும் இடத்தை நான் சென்று பார்க்கவில்லை. ஆனால் அது எந்த இடம் என்பதை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். பிரதிவாதிகளுககு கடன் கொடுத்தபோது நானும், எனது மனைவி, எனது மைத்துனர், எங்கள் ஊரை சேர்ந்த பிரபு மற்றும் பிரதிவாதிகள் இருந்தோம். பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டில் தலா ஒரு கையொப்பமும், தலா ஒரு ரேகையும் வைத்தார்கள். மேற்படி கடனுறுதி சீட்டு எழுதப்படாத வெற்று கடனுறுதி சீட்டு என்றால் சரியல்ல. அது எழுதப்பட்ட கடனுறுதி சீட்டு ஆகும். மேற்படி கடனுறுதி சீட்டில் எழுதியவர் ராஜேந்திரன் என்பவர் ஆவார். நான் பிரதிவாதிகளுக்கு எனது வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்து வந்து கொடுத்தேனா என்றால் இல்லை. அப்போது எனக்கு வங்கி கணக்கு இல்லை. எனது வீட்டில் வைத்திருந்த பணத்தை பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். எனது மைத்துனர் பெருமாள் சொன்னதன்அடிப்படையில் தான் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். பின்னர் பிரதிவாதிகள் கடனை திருப்பி செலுத்தாத காரணத்தினால் அவர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் எனக்கு பதிலறிவிப்பு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மேற்படி பதிலறிவிப்பில் பிரதிவாதிகள் ரூ.8 லட்சம் கடன் பெறவில்லை என்றும், ரூ.8 லட்சத்திற்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு இருப்பின் அந்த கடனுறுதி சீட்டின் நகலை அவர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு கடனுறுதி சீட்டுஎன்னால் உறுவாக்கப்பட்ட ஆவணம் என்ற காரணத்தினால் தான் அதன் நகலை பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் பெற்றிருந்த பணம் ரூ. 2லட்சத்தை திருப்பி கொடுத்துவிட்டார்கள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.01 17:22:34 +0530

I Additional District Judge,
Salem

என்றும், அதன்பிறகு ரூ.8 லட்சத்திற்கு இவ்வழக்கு கடனுறுதி சீட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ.8 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மாதம் ரூ.75 ஆயிரம் சம்பாதிப்பதாக நான் சொல்லியுள்ள நிலையில் என்னிடம் கடன்பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மைத்துனரை பிரதிவாதிகள் தான் சொல்லி அழைத்து வந்தார்கள். பிரதிவாதிகள் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துவிட்டு பணத்தை பெற்றுக்கொண்டு சென்று விட்டார்கள். எனது வழக்கு பொய் வழக்கு என்றும், எனது முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றும், எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.01 17:22:39 +0530

I Additional District Judge,
Salem